# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 32 October - 2019 Issue - 10


ஆசிரியர் உரை

## இயேசு – தேவ ஆட்டுக்குட்டி

**ப**ரலோகத்தில் வாசம் செய்யும் ஒன்றான மெய்த் தேவனால் மானிடருக்கு அருளப்பட்ட ஒப்பில்லா ஈவுகளில் ஒன்று அவருடைய வார்த்தைகளடங்கிய பரிசுத்த வேதாகமம். இப்புனித நூல் தேவத்துவத்துள் ஒருங்கிணைந்து செயல்படும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் பற்றி விதவிதமான பெயர்களால் பேசுகிறது. உதாரணமாக, பிதாவாகிய தேவன் பற்றி **யெகோவாயீரே, யெகோவாநிசி** என்று இப்படிக் குறைந்தது 60 நாமங்களாலும், குமரானாகிய இயேசு கிறிஸ்து பற்றி **இரட்சகர், மேய்ப்பர், மத்தியஸ்தர்** என்று குறைந்தது 130 பெயர்களாலும் இன்னும் பரிசுத்த ஆவியானவர் பற்றி **சத்திய ஆவியானவர், கர்த்தருடைய ஆவியானவர்** என்று இப்படிப் பல பதங்களாலும் குறிப்பிடுகிறது.

ஒரு வேளை, இவைகளை நாம் கவனிக்கும் போது இவ்வளவு நாமங்களும், பெயர்களும், பதங்களும் ஏன் கொடுக்கப்பட்டுள்ளன என்ற கேள்வி எழலாம். இங்கே ஒன்றிலே நாம் எப்பொழுதும் தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். பவுலடியார், தீமோத்தேயுவுக்கு சொல்வது போல், தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி உள்ளவனாகவும் இருக்கும்படி (II தீமோ. 3:16) வேதவாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளபடியால் வேதாகமத்தில் அவசியமில்லாதவைகள் என்று எதுவுமே இல்லை. ஆகையால், ஒவ்வொன்றுக்கும் நோக்கம் இருக்கவே இருக்கிறது. தேவத்துவம் பற்றிய ஒவ்வொரு நாமமும் நமக்கு மாறுபட்ட பார்வையைக் கொடுக்கிறபடியால், அவைகள் அனைத்தின் ஊடே நாம் பக்திப் புரிதலோடு கடந்து

வரும்போது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்பற்றிய பூரணப் பார்வையை நாம் ஒட்டுமொத்தமாகப் பெற்றுக் கொள்ள முடியும். கண்டிப்பாக, இது தேவனுக்கு உண்மையாகவே பயப்பட விரும்பும் ஒருவனுடைய பக்தி வாழ்வை மேலும், மேலும் பலமுள்ளதாக மாற்றும். இக்கூற்றில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

சரி, இயேசுவைப் பற்றிய 130 க்கும் மேலான நாமங்களில் ஒரு நாமமாகிய **தேவ ஆட்டுக்குட்டி** என்பது பற்றி நாம் இம்மாதம் பார்க்க இருக்கிறோம். இயேசுவானவர் தேவ ஆட்டுக்குட்டி என்பதை யோவான் நற்செய்தி நூலிலும் [யோவான் 1:289, 36], பேதுரு நிருபத்திலும் [I பேதுரு 1:19], வெளிப்படுத்தின விசேஷத்திலும் [வெளி. 5:12; 12:11] நாம் காண முடியும். இயேசுவானவர் ஏன் இப்படி **தேவ ஆட்டுக்குட்டி** என்றழைக்கப் பட்டார் என்பதைப் புரிந்து கொள்ள நமது வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களுக்குள்ளாகக் கடந்து வருவது அவசியம்.

ஆபிரகாமின் சந்ததியார் யாக்கோபின் நாட்களில் பஞ்சம் பிழைக்க எகிப்து தேசத்துக்குப் போய், யோசேப்பின் தயவால் கௌரவமாகப் பிழைப்பு நடத்தி, யோசேப்பை அறியாத ராஜா தோன்றின பிறகு கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டுக் கொடுமையாக நடத்தப்பட்டார்கள். ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இட்ட கூக்குரல் தேவ சமூகத்தை எட்டின போது, தேவன் அவர்களை விடுவிக்க மோசே என்னும் இரட்சகனை எழும்பப் பண்ணினார்[ யாத். 2:1-10]. இந்த மோசே மூலம் தேவன் நடப்பித்த ஒன்பது வாதைகளுக்கு பார்வோன் செவிகொடாமற் போனதால், பத்தாவது வாதையான தலைச்சன் பிள்ளை சங்காரத்துக்கு தேவன் ஆயத்தமானார். அப்படி எகிப்தியரின் தலைப்பிள்ளைகளைச் சங்கரிக்கக் கர்த்தர் கடந்து போகும் போது இஸ்ரலேரின் குடும்பங்கள் தப்பிக்க என்ன செய்ய வேண்டுமென்று விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது [ யாத்.12:1-13].

அந்த விளக்கங்களில் ஒன்று ஒருவயதான ஆண் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு அதின் இரத்தம் கதவு நிலைக்கால்கள் இரண்டிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும் என்பது. எந்த வீட்டு நிலைக்கால்களிலும் மேல் சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்பட்டுள்ளதோ அக்குடும்பத் தலைச்சன் பிள்ளைகள் காப்பாற்றப்பட்டார்கள். இரத்தம் அடையாளமாக இல்லாத எகிப்தியக் குடும்பத்துத் தலைச்சன் பிள்ளைகள் மற்றும் மிருக ஜீவன்களின் தலைச்சன்கள் என்று ஏகமாய் சங்காரம் செய்யப்பட்டது. **அங்கே அழிவுக்கும், காப்பாற்றப்படுதலுக்கும் இடையே ஆட்டுக்குட்டியின் இரத்தம் இருந்தது.** இதன் பிறகு தான் பார்

வோன் வழிக்கு வந்தான். அந்த விடுதலையின் நாள் இஸ்ரவேல் சரித்திரத்தின் முக்கிய நாளாக இருக்கும்படியாக கர்த்தர் கட்டளை யிட்டார். அந்த நாள் உங்களுக்கு நினைவு கூருதலான நாளாய் இருக்கக்கடவது. அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர் களாக அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள் [யாத்.12:14] என்றார்.

இத்தேவக் கட்டளையை சிரமேற்கொண்டு கைக்கொண்ட இஸ்ரலேர்கள் இந்நாளை பஸ்கா பண்டிகை என்ற பெயரால் வருடந்தோறும் நித்திய நியமமாகக் கொண்டாடி வந்தார்கள். ஒரு 1500 ஆண்டுகள் கழித்து இயேசுவின் நாட்களில், அதேவிதமான பஸ்காவின் பண்டிகைச் சூழல் எருசலேம் மாநகரைத் தொற்றி யிருந்தது. ஆம்,ஒவ்வொரு யூதனையும் அவர்களுடைய முற்பி தாக்கள் அடைந்த விடுதலைச் சிந்தையும், அப்பொழுது அடிக்கப் பட்ட ஆட்டுக்குட்டி நினைப்பும் ஆட்கொண்டிருந்தது. இக்கால கட்டத்தில் தான் யோவான் ஸ்நானகளின் ஊழியமும் ஆரம்ப மாயிருந்தது.

அச்சமயத்தில் எல்லா நீதியையும் நிறைவேற்றும்படியாய் ஞா னஸ்நானம் பெற்றுக் கொண்ட இயேசுவானவர் [மத்.3:15], பிசாசி னால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப்பட்டு [மத். 4:1] பிசாசின் சோதனைகளை வெற்றி கரமாக முடித்து நகரத்திற்குள் வந்து சேர்ந்தார். அங்கே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு **இதோ, உலகத்தின் பா வத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்றார். [யோ வான் 1:29]. யூதர்கள் பஸ்காவின் ஆட்டுக்குட்டிச் சிந்தையில் மூழ் கியிருந்ததை யோவான் சரியாக நாடிபிடித்து, அட யூதர்களே இங்கே பாருங்கள், இவர் தான் உங்களை ஆன்மீக ரீதியில் விடு தலையாக்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று ஓர் உண்மையை பகிரங்கப்படுத்தினார்.

சரி, யோவான் ஏன் இயேசுவை பஸ்காவின் ஆட்டுக்குட்டி யோடு ஏன் ஒப்பிட்டார் என்றும், அப்படி ஒப்பிட்டதன் மூலம் நமக் குக் கிடைக்கும் ஆவிக்குரிய பாடங்கள் என்னவென்றும் இப்பொ ழுது கவனிப்போம்.

### I. பஸ்காவின் ஆட்டுக்குட்டி தெரிந்தெடுக்கப்பட வேண்டும்

இயேசுவானவர் பஸ்காவின் ஆட்டுக்குட்டியோடு யேவானால் ஒப்பிடப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று பஸ்காவின் ஆட்டுக் குட்டி போல இயேசுவும் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்பது.

இஸ்ரலேர்கள் பஸ்காவை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டு மென்ற விளக்கத்தில் முதலாவதாக வருவது அந்த ஆட்டுக்குட்டி

தெரிந்து கொள்ளப்பட வேண்டுமென்பது. **நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள் என்றார்** (யாத்.12:2). அப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட ஒன்று தான் கர்த்தருக்குக் கொடுக்கப்பட வேண்டும். (12:11)

யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்று வெளிப்படுத்தினபோது இவ்வுண்மையை அறிந்தவராகவே ஆவியானவரின் ஏவுதலில் இப்படிப் பேசியுள்ளார். ஆம், பேதுரு அப்போஸ்தலன் இயேசுவைக் குறித்து, மனிதரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் **தெரிந்து கொள்ளப்பட்டதும்** விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவதரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ( I பேதுரு 2:4)என்று எழுதியுள்ளார். எபிரெயர் ஆசிரியர், அப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட இயேசுவின் சரீரம் தான் **கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டது** என்று அறிவிக்கிறார் (எபி.10:10).

ஆக, யோவான் இயேசுவை இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று சொன்னதில் கண்டிப்பாக அர்த்தம் உள்ளது.

II **பஸ்காவின் ஆட்டுக்குட்டி பழுதற்றதாய் இருக்க வேண்டும்**.

இயேசுவானவர் பஸ்காவின் ஆட்டுக்குட்டியோடு யோவானால் ஒப்பிடப்பட்டதற்கான காரணங்களில் இரண்டாவது, பஸ்காவில் ஆட்டுக்குட்டி போல இயேசு பழுதற்றவர் என்பது.

தெரிந்தெடுக்கப்பட்ட அந்த ஆட்டுக்குட்டி **பழுதற்றதும்,** ஆணும், ஒருவயதுள்ளதுமாய் இருக்க வேண்டும் ( யாத்.12:5). பொதுவாகவே கர்த்தருக்கான பலி எப்பொழுதுமே தெளிவானதாய் இருக்கவேண்டுமென்பதே இஸ்ரவேலுக்கான போதனை. லேவியராகமத்தில் நாம் இதைக் காண முடியும். குருடு, நெரிசல், முடம், கழலை சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின் மேல் தகன பலியிடாமலும் இருப்பீர்களாக (லேவி.22:22) என்றுள்ளது.

யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்று அறிவித்த போது, இயேசு பழுதற்றவர் என்பதை உணர்ந்தவராகவே இருந்துள்ளார். ஆம், இயேசு, ஆண்டவர் பழுதற்றவள் என்பதற்கான வேத ஆதாரத்தைப் பாருங்கள். **நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான**

**ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்** (எபி.4:15). இதே எபிரெயர் ஆசிரியர் மேலும் கூறுகையில், கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் **பாவமில்லாமல்** தரிசனமாவர். (எபி.9:28). ஆம், மானிடமனைத்துக்கும் பொதுவாகக் காணப்படும் பாவம் என்னும் பழுது அவரிடம் அறவே இல்ல. ஆகவே, இயேசுவானவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்பதில் முழு அர்த்தம் இருக்கவே இருக்கிறது.

III **பஸ்காவின் ஆட்டுக்குட்டி பலிசெலுத்தப்பட வேண்டும்.**

இயேசுவானவர் பஸ்காவின் ஆட்டுக்குட்டியோடு ஒப்பிடப் பட்டதற்கான காரணங்களில் மூன்றாவது, பஸ்காவின் ஆட்டுக் குட்டி போல இயேசு பலியிடப்பட்டார் என்பது.

இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்காவுக்காகத் தெரிந்து கொண்ட பழுதற்ற ஆட்டுக் குட்டியை என்ன செய்ய வேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அதை இந்தமாதம் பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் **அதை அடித்து** அதின் இரத்தம் கொஞ்சம் எடுத்து, தங்கள் அதைப் புசிக்கும் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள் (யாத்.12:6-8).

யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்று முன்னறிவித்தபோது, ஜனங்களின் ஆன்மீகத் தேவைக்காக அவர் அடிக்கப்பட்டு பலியிடப்படுவார் என்பதை அறிந்தவராகவே இருந்தார். பொதுவாக, பலி என்றால் ஒன்று சாக வேண்டும். இதையே வேறுவிதமாகச் சொல்வதென்றால், இருக்கின்ற ஒன்று இல்லாமல் போக வேண்டும். அதுதான் பலி. இப்பொருளினடிப்படையில், இயேசுவானவர் மானிடருக்காகத் தன்னைத் தியாக பலியாக ஒப்புக் கொடுப்பதற்கு முன்பாகவே, தனது தியாகச் செயலை ஆரம்பித்துவிட்டார்.

**எப்படியெனில், அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனிதர் சாயலானார்** (பிலிப். 2:67).

இதை மேலெழுந்தவாரியாகப் படிக்காமல், உள்ளான பொருளை உணர்ந்து வாசித்துப் பாருங்கள். இயேசுவின் தியாகம் எங்கிருந்து ஆரம்பமாகிறது என்பது புரியும். நித்திய காலமெல்லாம் தனக்கிருக்கும் இடத்தை, தனக்கிருந்த அந்தஸ்தை மானிடருக்காக விட்டு வந்தது என்ன சாதாரண தியாகமா? இயேசு **அடிக்கப்பட்டு, சிலுவையில் தம்மைத்தாமே ஒரேதரம் பலியிடுவதற்கு** முன்பாகவே [எபி.7:27] அவருடைய தியாகம் ஆரம்பமாகி விட்டது. இதன் மூலம், யோவான் ஸ்நானகன் இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்று அறிவித்தது எல்லாவகையிலும் நியாயம் தான் என்பது வெளியாகிறது.

IV **பஸ்காவின் ஆட்டுக்குட்டி விடுதலைக்குக் காரணமாயிருந்தது**

இயேசுவானவர் பஸ்காவின் ஆட்டுக்குட்டியோடு ஒப்பிடப் பட்டதற்கான காரணங்களில் மற்றொன்று, பஸ்காவின் ஆட்டுக் குட்டி போல இயேசுவும் விடுதலைக்குக் காரணமாயிருக்கிறார் என்பது.

எகிப்தியரின் முதற்பேறானத்தையும் அதம் பண்ணுவேன் என்று கர்த்தர் இவ்விதம் வாக்களித்தார். **அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன்கள் மட்டும் முதற் பேராயிருக்கிறவைகளையெல்லாம் அதம் பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர் என்றார்.** [யாத்.12:12]. மரணத்திலிருந்து தப்பிக்க அன்று ஒரே ஒரு வழிதான் இருந்தது. ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல் சட்டங்களில் தெளிக்கப்பட்டிருக்க வேண்டும் [12:7]. இரத்தம் அடையாளமாகக் கொண்ட வீட்டைக் கர்த்தர் கண்டு கடந்து போவார் [12:13]. அங்கே ஆட்டுக்குட்டியின் இரத்தம் காப்பாற்றும்படியான வல்லமையைக் கொண்டிருந்தது.

இயேசு ஆண்டவரின் இரத்தத்திற்கு பஸ்காவின் ஆட்டு இரத்தத்தைக் காட்டிலும் கூடுதலான வல்லமை உண்டு. எப்படியெனில், அங்கு கிடைத்தது **சரீர விடுதலை.** இயேசுவின் இரத்தம் மூலம் கிடைப்பது **ஆன்ம விடுதலை. இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்று இயேசு தாமே கூறியதைப் பேதுரு முற்றிலும் உள்வாங்கிக் கொண்டபடியால்தான்,** அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை என்றான் [அப்.4:12].

பாவங்களை எடுத்துப்போடும் வல்லமை இயேசுவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு. (1 யோவான் 1:7). பூமியில் பிறக்கும் ஒவ்வொருவரும் இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்துவது அவசியம். ஏனெனில், மானிடர் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து காணப்படுகிறார்கள் (ரோமர் – 3:23). இயேசுவின் இரத்த்தினாலான பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும் ஒருவன் பெற்றுக்கொள்ள வேண்டும். இக்கருத்தை நாம் அப்போஸ்தலர் 2:38 –ல் காணலாம். **பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான்.** அப்படியானால், இயேசுவின் இரத்தத்தின் மூலமான பாவ விடுதலையை, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நீங்கள் பெற்று விட்டீர்களா? இல்லை என்பது உங்கள் பதிலாக இருக்குமானால் உடனடியாகக் கீழ்ப்படிய உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்பாக, இதை ஒட்டிய ஒரு முக்கியச் செய்தியை உங்கள் மனக்கண்களுக்கு முன்பாகக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். யோவான் 1:36,37 வசனத்தைப் பாருங்கள். **இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு; இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள்** (யோவான் 1:36,37).

அருமையானவர்களே, அந்நாட்களில் யோவானுக்கும் சீடர்கள் இருந்தார்கள். அவனுடைய சீடர்களில் இரண்டுபேர், யோவான் சொன்னதைக் கேட்டு, யோவானைப் பின்பற்றுவதைத் துறந்து, இயேசுவைப் பின்பற்றத் துவங்கினர். இது உண்மை யாகவே ஆச்சரியமான ஒன்று. எப்படியெனில், **ஸ்திரீகளிடத் திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானானைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை....** (மத்.11:11) என்று இயேசுவே கூறியுள்ளார். அக்காலகட்டத்தில் யோவானுடைய ஊழியம் உச்சத்தில் இருந்தது. யோவானை நோக்கித் திரளான ஜனங்கள் வந்து கொண்டிருந்த நேரம் (லூக்கா.3:7).

ஆனால், இயேசுவின் ஊழியமோ அப்பொழுதுதான் ஆரம்பம். அவருடைய அற்புத வல்லமை எதுவும் பெரிதாக வெளிப்பட வில்லை. மலைப்பிரசங்கம் போன்ற பிரசங்கங்கள் எதுவும் போதிக் கப்படவில்லை. இயேசுவின் தெய்வீகம் வெகுஜனங்களால் அங்கீ கரிக்கப்படவில்லை. சிலுவை மரணம் உட்பட எதுவுமே

நடைபெறவில்லை. ஆயினும், **இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று கேட்ட மாத்திரத்தில், அக்கூற்றில் அடங்கியுள்ள உண்மையை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு அந்நாட்களில் பேரும், புகழுமாய் இருந்த யோவானை அப்படியே விட்டு விட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.** அப்படிப் பின்பற்றின இருவரில் ஒருவன் அந்திரேயா. இவன்தான், பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தவன்(யோவான் 1:41).

அன்பானவர்களே, இந்த இரண்டு பேரைப்போல நியாயமானது, சத்தியமானது, வேத வசனங்களில்படி நமக்கு அறிவிக்கப்படும்போது, அசத்தியமானதைத் தூக்கி எறிந்து விட்டு நீதியானதைப் பின்பற்றுவதற்கு நம்மில் எத்தனை பேர் ஆயத்தமாக இருக்கிறோம்? ஸ்திரீகளில் பிறந்தவர்களில் மிகவும் பெரியவனாகிய யோவானையே விட்டுவிட அவர்கள் தயங்காதபோது, நாம் எப்படியெல்லாம் சாக்குப்போக்குகள் சொல்லுகிறோம் என்று எண்ணிப் பாருங்கள்! வேத உபதேசத்துக்குப் புறம்பானதாக நாம் சார்ந்திருக்கும் சபைப் பிரிவு பற்றிப் பெருமை பேசுகிறோமே. எங்களுக்குப் பிடித்தமான ஊழியர், பாஸ்டர், ரெவரெண்ட் என்று மனித துதி பாடுகிறோமே. யோவான் ஸ்நானனை விடவா அவர்களெல்லாம் பெரியவர்கள்? அதுமட்டுமல்லாமல் பண்டிகை, அறுப்பின் பண்டிகை என்று எடுக்கப்படும் விழாக்கள் பற்றிப் பீற்றிக் கொள்ளுகிறோமே. உண்மைதானே! அந்த இரண்டு பேருடைய ஆன்மீக முதிர்ச்சி எங்கே? நம்முடைய பாமரத்தமான பக்திச் செயல்பாடு எங்கே? சிந்திப்போம்.

அருமையானவர்களே சத்தியத்திற்கும், நீதியானதுக்கும் தலை வணங்க நாம் ஒரு போதும் தயங்கவே கூடாது. இயேசுவானவர் தான் நமக்காக அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி. அவரை மாத்திரம் நாம் எல்லா நிலையிலும் பின்பற்ற வேண்டும். அவருடைய உபதேசத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்ள வேண்டும். (யோவான் 12:48). அவருடைய ஒன்றான மெய் சபையில் மாத்திரம் அங்கம் வகிக்க வேண்டும் (எபே.4:4). ஏனெனில், நமக்காக அடிக்கப்பட்ட அந்த **ஆட்டுக் குட்டியானவர்தான், வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திர ராயிருக்கிறார்** (வெளி.5:12) எந்த மனிதனுக்கும் அருகதை கிடையாது.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டு ஆட்டுக்குட்டியானவருக்காக நாம் எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்யப் பரலோகத்தின் தேவன் நமக்குக் கிருபை செய்வாராக! ஆமென்!! ★

# இன்று நமக்குத் தேவையான அன்பு

Bro. J.C. சோட்

**அ**ன்பைப் பற்றி இன்றைய நாட்களில் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். நாம் சகோதரர்களிடத்தில் அன்பு கூர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறோம் நாம் நம் சகோதரர்களை எதிர்ப்பதற்குப் பதிலாக அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். இது உண்மையாயிருக்க, இதில் வேடிக்கையான செயல் என்னவென்றால், அன்பைப் பற்றி உபதேசிக்கிறவர்கள், அநேக சமயங்களில், தங்களோடு ஒத்துப்போகாதவர்களிடம் கலகத்திலும், சண்டையிலும் ஈடுபடுகிறார்கள். அன்பைப் பற்றி வேதாகமம் ஏராளமான, தாராளமான காரியங்களைச் சொல்லி யிருந்தாலும் கூட, இன்றைய நாட்களில், முன்னெப்போதும் இல்லாததைவிட அன்பு மக்களிடத்தில் தணிந்திருப்பதை நம்மால் காணமுடிகிறது.

அன்பைக் குறித்துக் அடிக்கடி போதிப்பவர்களிலே சிலர், அன்பு என்றாலே அது சரீரப்பிகாரமான அல்லது லௌகீக அன்பு என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், அவர்களுடைய மனது உலக சிற்றின்பக் காரியங்களால் நிறைந்திருக்கிறது. மேலும், இவர்கள் லௌகீக அன்புதான் இன்றைய நாட்களில் உலகத்தில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வாக இருக்கிறது என்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல. மாம்சீக அன்பு அல்லது லௌகீக அன்பு பிரச்சனைகளுக்குத் தீர்வாயிருப்பதைவிட, இன்னும் பிரச்சனையை பெரிதாக்கக்கூடியதாக இருக்கிறது என்பது தான் உண்மை யாயிருக்கிறது. இது குறித்து அப்போஸ்தலன் யோவான் கூற்றைக் கவனிப்போம். உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளிளெல்லாம் பிதாவினா லுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டா னவைகள், உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் [ Iயோவான் 2:15–17].

**அன்பு என்பதற்கு உலகத்தின் விளக்கமும், தேவனுடைய விளக்கமும்**

அன்பு என்றால் என்ன? அன்பு என்பது, மற்றவர்களிடத்தில் நாம் காட்டும் பாசமாகவும், நட்பாகவும் இருக்கிறது. அது மற்றவர்களிடத்தில் நமக்கு ஏற்படும் ஈர்ப்பாகவும் இருக்கிறது. பொதுவான சூழ்நிலைகளில் இது சரீரப்பிரகாரமான அன்பாகவும் இருக்கிறது. ஆனால், நாம் இப்போது, சகோதர அன்பைப் பற்றித்தான் அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வித அன்பைத்தான் நாம் ஒருவரிலொருவர் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய எல்லாச் செயல்பாடுகளுக்கும், அன்புதான் அடிப்படையாக இருக்கவேண்டும். இந்த அன்பைப் பற்றிய சிறந்த விளக்கத்திற்கு I கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை வாசியுங்கள். அதிலே தான் அன்பு என்றால் என்ன? அது என்ன செய்யும், என்ன செய்யாது என்பதைப்பற்றி எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்கு பொறாமையில்லை; **அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பா யிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்; சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் அழியாது. தீர்க்க தரிசனங் களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம், அறிவானாலும் ஒழிந்துபோம்** (1கொரி.13:4-8).

இன்றைய உலகில் அன்பு அதிக அவசியமாயிருக்கிறது. இந்த அன்பு மாயமற்றதாகவும், தூய்மையானதாகவும், உண்மை யானதாகவும் இருக்க வேண்டும். இது கணவன், மனைவி மற்றும் குடும்ப வட்டத்தோடு நின்றுவிடக் கூடாது. மாறாக, அது நம் நண்பர்கள், அயலகத்தார், சத்துருக்கள், தேசம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் மிகவும் அருமையாக நம் சத்தருக்களைச் சிநேகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக் கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத்தேயு 5:44) என்று.

இப்படியாக அன்பானது நம் சகோதரர்களிடத்தில் நடந்து கொள்ளும் விதத்தில் பொறுமையோடும், புரிந்து கொள்ளுத லோடும் மன்னிக்கும் தன்மையோடும் நடந்து கொள்ள உதவுகிறது. இருந்த போதிலும், அன்பு சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளவோ அல்லது நம்மைச் சுற்றிலும் நடக்கிற பாவங்களைக் கண்டு, கண்களை மூடிக் கொண்டிருக்கும்படி ஏவி விடக்கூடாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிறருக்கு உதவுதல் என்று வரும்போது அவர்கள் நம்மிடத்தில் வரட்டும் என்று காத்திருக்காமல் நாமாகவே அவர்களிடம் சென்று அவர்களுக்கு உதவி செய்ய அன்பு நம்மை உற்சாகப்படுத்து கிறது. இன்றும் இவ்விதமான அன்புதான் அவசியப்படுகிறது. அதாவது, பேசப்படுகிற அன்பு அல்ல, செயல்படுத்துகிற அன்பு. இந்த அன்புதான் உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டு வரும். மேலும், இது நடைமுறை யிலிருக்கும் சட்டங்களை விட இறுதியில் அதிக நன்மை பயக்கும். அன்பு என்பது பெலவீனத்தின் அடையாளமல்ல, மாறாக, அது பெலத்தின் அடையாளமாக இருக்கிறது.

நாம் பார்த்துக் கொண்டிருக்கிற அன்பு தேவனாலும், அவரு டைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உண்டானது என்பதை பரிசுத்த ஆவியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வேதாகமத்தில் நாம் கற்றுக்கொள்கிறோம். அதன் விளைவாக நாம் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நம் வாழ்வில் அவருடைய சித்தத்தைச் செய்து கொண்டு வருகிறோம். நாம் அவரிடத்தில் கொண்டிருக்கும் அன்பு, நம் அயலகத்தாரையும், இவ்வுலகிலுள்ள எல்லோரையும் நேசிக்கத் தூண்டுகோலாக இருக்கிறது [மத்தேயு 22:36-39]. ஆகவே, நாம் தேவனிடத்தில் அன்பு கூருகிறபடியால், நாமும் ஒருவரிலொருவர் அன்பாக இருக்கிறோம். ★

## மனச்சாட்சி

- தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அருமையான ஈவு.
- இது உள்ளார்ந்த மனிதனின் ஒரு பகுதியாயிருக்கிறது.
- சில வேலைகளில் நாம் செய்வது சரிதான் என்று நம்பவைக்கும்.
- தேவனுடைய வார்த்தைகளால் இது படிப்பிக்கப்படவேண்டும்

# உபத்திரவக் காலத்தில் நான் நிற்க முடியுமா?

**Sis. Betty Burton choate**

**த**லையங்கத்தில் காணப்படும் கேள்வி ஒவ்வொரு கிறிஸ்த வருடைய மனதிலும் அடிக்கடி எழும்ப வேண்டும். கிறிஸ்த வத்தைத் துறப்பதற்கு நான் அச்சுறுத்தப்பட்டும், நான் அதற்கு எதிர்த்து நிற்கும் போது, என் உயிருக்கும், என் பிள்ளைகளின் உயிருக்கும் அச்சுறுத்துதல் ஏற்பட்டால் நான் எப்படி நிற்பேன்? அநேகமாக நம்மில் ஒவ்வொருவருக்கும் அச்சூழலை எதிர் கொள்ளும் வரை விடை தெரியாது. நமக்கு முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களிடம் இருந்த தைரியம் இருக்க வேண்டுமென்பது நம்முடைய ஜெபமாக இருக்க வேண்டும்.

பழங்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாம் இப்போது பொருளாதார ரீதியாகவும், சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிர காரகாகவும் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம், அதினி மித்தம் நாம் பசியாக இருப்பதில்லை. இன்று நம்மை யாராவது தாக்கிவிடுவார்களோ என்று பயத்தோடு பின்னால் திருப்பிப் பார்த்துக் கொண்டு பயத்தோடு நாம் வாழவில்லை. எவ்வித சவால்களுமின்றி நாம் விரும்பியபடி ஆராதிக்க முடிகிறது. பலதரப்பட்ட மொழிபெயர்ப்புகளில் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் கூடுதலாக ஒத்த வாக்கியங்கள், வியாக்கியான புத்தகங்கள், இணையதள விளக்கங்கள் போன்றவற்றை நாம் பெற்றிருக்கிறோம்.

மேலே பட்டியலிடப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் எண்ணிப் பார்க்கும் போது , இக்காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தேவனுடைய அன்பெனும் சூரிய ஒளியில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறேம். ஒரு தகப்பனாக சம்பூரணாயிருக்கிற நம் பரமப்பிதா தம்முடைய பிள்ளைகள் மீது, ஆசீர்வாதங்களை வருஷிக்கச் செய்கிறார். நாம் உண்மையுள்ள பிள்ளைகளாக, தேவனுடைய அன்புக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நம்முடைய அபதணீதமான ஆசீர்வாதங்கள் மற்றும் சௌ கரியங்கள் மத்தியில் இஸ்ரவேல் ஜனங்கள், பாலும் தேனும்

ஓடுகிற கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு முன்பாகத் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு விடுத்த எச்சரிப்பை நாம் மறந்துவிட வேண்டாம். ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந் திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல தேசத்துக்காக அவரை ஸ்தோத்தரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற்போகாத படிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும் போதும், உன் ஆடுமாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினவரும்... (உபா.8: 10-14) என்று வாசிக்கின்றோம்.

கடந்த பல வருடங்களுக்கு முன் தேவன் இஸ்ரவேலர் களுக்கு விடுத்த எச்சரிக்கை அப்படியே இன்றைய கிறிஸ்தவர் களுக்குப் பொருந்துகிறது. பிரசங்கிமார்களும் சபையை நடத்து கிறவர்களும் உயிர்ப்பிக்கும் உபதேசத்தைக் கண்டு கொள்ளாமல், வேதாகமத்தை ஒரு வரலாற்றுப் புத்தகமாகவும், வாழ்வின் ஒழுக்க நெறிகளைக் காட்டும் வழிகாட்டியாகவும் பார்க்கும் போக்கு தான் அதிகரித்து வருகிறது. சிலர், சபையின் ஒருமைத்தன்மை, இரட்சிப்பின் உபதேசம், புதிய ஏற்பாட்டு ஆராதனை முறைமை, விவாகம், விவாகரத்து, பிரிவினையை உண்டாக்கும் காரியங்கள் போன்றவற்றில் மெத்தனப் போக்காக இருக்கின்றனர். ஏனென்றால், இதினிமித்தம் மற்றவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டாமென்று நினைத்து மேற்சொல்லப்பட்ட காரியங்களைப் போதிக்கத் தயங்குகிறார்கள். வேறு சிலர், உபதேசக் காரியங்களில் மௌனம் காத்து, மார்க்கப் பிரிவினை உலகத்தோடு சமரசம் செய்து கொள்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, கிறிஸ் துவை விசுவாசிப்பவர்கள் எல்லோருமே கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்கள தான் என்பதாகும். இப்படி உபதேசக் காரியங்க ளில் பிரசங்கியர்கள் மௌனம் காத்ததின் விளைவு, சபை அங்கத் தினர் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அழமான அறிவு இல்லாமற்போய்விட்டது. எனவே, அவர்கள் கிறிஸ்வுக்குள் நிலையாக நிற்பதற்கான உறுதியான அஸ்திபாரம் இல்லை.

பிரசங்க பீடத்திலிருந்தும், மூப்பர்களிடமிருந்தும் மௌனம் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், பெரும்பாலான கிறிஸ்தவர்களின்

பார்வை உலகத்தின் பக்கமாய்த் திரும்பிவிட்டது. இவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி, உலகின் விலையுயர்ந்த பொருட்களைப் பெற்றுக் கொண்டு பொழுதுபோக்குகளில் தங்களை மூழ்கடித்து, சினிமா, விளையாட்டு போன்ற காரியங்களில் தங்கள் நேரத்தை விரயமாக்குவது வாடிக்கையாகி விட்டது. மேலும், பெற்றோர்கள் கடுமையாக உழைத்து, பொருளீட்டி, தங்கள் பிள்ளைகளைப் படிப்புக் காரியங்களில் ஈடுபடுத்தி, உணவு தயார் செய்து, வீட்டைப் பராமரிப்பதில் நேரமனைத்தையும் செலவழித்து விட்டால், பிறகு, பிள்ளை களைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்ப்பதற்குப் போதிய நேரம் எங்கே இருக்கிறது? தங்களுக் குள்ளே வேர் கொள்ளாதபடியால், கொஞ்சகால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள். இதனிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடை கிறார்கள். இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் (மாற்கு 4:17).

இன்று கிறிஸ்தவர்கள் சிலர், தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஆழமான அறிவு இல்லாத காரணத்தினாலும், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள, விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடும் இல்லாத காரணத் தினாலும், வரும் உபத்திரவத்தை எதிர்கொள்ளும்போதும், நிலை கொள்ளாமல் ஓடிவிடுகிறார்கள். மேலும், இவ்வுலகம் நம்மை அனுதினமும் அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கும். எப்படியெனில், நாம் வேதாகம போதனைகளுக்காக, நிற்பதற்கு அச்சுறுத்தலாக சட்ட திட்டங்கள் இயற்றப்பட்டுக் கொண்டி ருக்கிறது. இன்னும், விவாகரத்து, கருக்கலைப்பு, ஓரினச் சேர்க்கை, போன்றவைகளுக்கு ஆதரவாகத்தான் அரசாங்கம் சட்டங்களை இயற்றுகின்றன. இன்னும் மோசமாக, மணமாகாமலேயே சேர்ந்து வாழும் முறை மற்றும் பலதார முறை ஏகோபித்த பேரால் இன்றளவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும், உலகெங்கிலும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவான குரல் ஓங்கத் துவங்கியிருக்கிறது. ஆனால், தேவனுடைய பார்வையில் ஓரினச்சேர்க்கை அருவருப்பான தாகும். அத்தகைய ஓரினச்சேர்க்கைக்கு எதிராகச் செய்யப்படும் பிரசங்கங்கள் குற்றங்களாக அறிவிக்கப்படவேண்டுமென்று சமூகத்தில் அதற்கு ஆதரவு பெருகியிருப்பதால், அதற்கு எதிராக பிரசங்கம் செய்யும் பிரசங்கிமார்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலித்துக்

கொண்டே இருக்கிறது. ஆதலால், இப்போதிருக்கிற சூழ்நிலையில், நாம் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆதரவாகப் பேசவில்லையென்றால், அதினிமித்தம் நாம் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனையை அனுபவிப்போம். இப்போது எனக்குள் எழும் கேள்வி என்னவென்றால், நாம் சத்தியத்திற்காக நிற்போமா? உபத்திரவத்தை எதிர்கொள்வோமா? சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்வோமா? அல்லது சிறைக்குச் செல்வோமா?

நாத்திகமும், மனிதக் கொள்கைகளும் பல வருடங்களாக வேதாகமத்தில் வேரூன்றியிருக்கிற நமது கலாசாரத்தை அழிக்கக் களம் இறங்கியிருக்கின்றன. இப்போது, அதோடு சேர்ந்து மற்றுமொரு அச்சுறுத்தல், உலகின் பல இடங்களில் முளைக்கத் தொடங்கி யிருக்கிறது. அது வேறொன்றுமல்ல மதவெறியாட்டம் தான். அவர்களுடைய ஒரே குறிக்கோள் வேதாகமத்தின் கலாசாரத்தை வேரறுப்பதே!

மதவெறியர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களை அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கி, கொலை கூட செய்கிறார்கள். இவர்கள் இப்படி காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டு, அதை இறை சேவை என்று இதயத்தில் ஈரமில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் இறை நம்பிக்கைக்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் தூஷணம் சொல்லுகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு துன்புறுத்தப்படுவதும், கொல்லப்படுவதும் தான் வேதனைக்குரிய விஷயமாகும்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே, நமக்குள்ளே இக்கேள்வியைக் கேட்கும்படி உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். உபத்திரவ காலத்தில் நான் தாக்குப்பிடிப்பேனா? என்பதுதான். நிச்சயமாக, நாம் தேவனுடைய வார்த்தைக்குள் மூழ்கி, அவருக்கென்று அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் நாம் தாக்குப் பிடித்து, அவருக்காக நிலைநிற்க முடியும். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? (ரோமர் 8:36). நாம் உறுதியான நிலையிருந்தால், நம்முடைய கர்த்தராகிய இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு எதுவும் நம்மை பிரிக்க முடியாதென்று நிச்சயித்துக் கொள்ள முடியும். ☆

# ஆவியின் கனியாகிய அன்பு

Dr. ஏபில் நாயகம்

**தே**வனுடைய பரிசுத்தமான நாமத்தில் வாலிபர்களாகிய உங்களுக்கு வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தைகளின் துணையோடு உங்களோடு உரையாடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. கடந்த மாதம் ஆவியினாலே சரிரத்தின் கிரியைகளை அழித்துப் போடுவதன் முக்கியத் துவத்தையும், அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் பற்றிப் பார்த்தோம். சரீர இச்சைகளை ஒழிப்பதோடு மட்டும் நம் வேலை முடிவதில்லை. ஆவியின் கிரியைகளில் எப்படிப் பெருகி வளருவது என்பதில் நம் கவனம் எப்பொழுதும் இருக்க வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் வரும் மாதங்களில் ஆவியின் கனிகள் ஒவ்வொன்றையும் குறித்து தியானிக்க முயற்சி செய்வோம்

நம் தேவன் அன்பாகவே இருக்கிறார் [I யோவான் 4:8 ]. ஆனால் அன்பு என்றால் என்ன? ஒரு கிறிஸ்தவனுடைய அன்பின் நிலைப்பாடு என்ன? தேவனிடத்திலும் சக மனிதர்களிடத்திலும் எப்படி அன்புகூர வேண்டும்? என்ற கேள்விகளுக்கு வேதத்தின் துணையோடு நாம் பதில்களைத் தேடுவோம்.

II கொரி. 13:11 ல்– அன்பிற்குக் காரணமாக தேவன் இருக்கிறார் என்று வாசிக்கிறோம். அவர் அன்பின் பிறப்பிடமாகவே இருக்கிறார். அந்த தேவன் அவருடைய அன்பை நம் மீது காட்டியிருக்கிறார். ரோமர் 5:8ல் **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார்** என்று வாசிக்க முடியும். சற்றும் தகுதியில்லாத நம்மேல் அந்த அன்பை விளங்கப் பண்ணினார். ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமாக முழுமையான உச்ச கட்ட அன்பைத்தான் தேவன் நம்மீது காட்டினார். நமக்காக மரித்ததினாலே தேவனின் குமாரனாகிய கிறிஸ்துவும் அவ்வன்பை வெளிப்படுத்தினார்.

தேவனிடமிருந்தும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் வந்த அன்பை ருசி பார்த்த நாம் அந்த

அன்பை நம் வாழ்வில் எப்படிப் பிரதிபலிக்கிறோம்? எபேசியர் 5:21 நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறதை வாசிக்கிறோம். தேவனும் நாம் அவரைப் போலவே அன்பைப் பிரதிபலிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கொலோ 3:12-14 ல் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கொலேசே சபையை உற்சாகப்படுத்துகிறார். Iகொரி 16:14ல் **உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப் படக்கடவது.** பிரியமான வாலிபர்களே! இன்னும் அநேக வசனங்களை நாம் வாசிக்கலாம். ஆனால், நாம் நம்மை கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் உண்மையான அன்பு இருக்கிறதா?

நாம் செய்கிற காரியங்களில் அன்பு இருக்கிறதா? என்ற கேள்வியின் அர்த்தம் என்ன? தேவனுடைய அன்பை கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விட முடியுமா? தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விடமுடியுமா? உரத்த சத்தமாய்ப் பாடுவதும், ஆடல், பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் பிரதிபலிக்கப் போதுமானதாக இருக்குமா?

யோவான் 14:15 ல், நீங்கள் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். அப்படியென்றால், எதைச் செய்கிறோமோ இல்லையோ, அவருடைய கற்பனைகளான வசனங்களை நாம் நிச்சயம் கைக் கொண்டாக வேண்டும்.

நாம் தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் அன்பினாலும் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவும் பிதாவின் அன்பிலே கற்பனைகளைச் செய்வதன் மூலம் நிலைத்திருந்தார் ( யோவான் 15:10). கற்பனைகளை கைக்கொள்ள முதலாவது கற்பனை களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அநேக வாலிபர்கள் தவறாமல் ஆராதனைக்குச் செல்லும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், தேவனுடைய வசனங்களைக் கற்று கொள்வதில் மிகவும் பின்தங்கி இருப்பார்கள். தேவனுடைய வசனங்களை, அவருடைய கற்பனைகளைத் தெரிந்து கொள்ளாமல், யாராலும் அதைக் கைக்கொள்ள முடியாது. கைக் கொண்டு நிறைவேற்றாமல் அவருடைய அன்பை நம்மால் பிரதிபலிக்க

முடியாது. ஆக, நாம் கிறிஸ்துவுக்கு சிநேகிதராக மாற அவருடைய கற்பனைகளைக் கற்று பின் அதைக் கைக்கொள்ள வேண்டும்.

**I** யோவான் 4:20–21 ல், தேவனுடைய அன்பை நாம் நம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமானால் தேவனுடைய கற்பனைகளைக் கற்று அவைகளுக்குக் கீழ்ப்படிந்து சகோதரரை நாம் சிநேகிக்க வேண்டும் மற்றும் அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். ஒருவேளை, நீங்கள் இந்தக் கற்பனைகளைக் நிறைவேற்றுபவராக இருந்தால் மகிழ்ச்சி. ஆனால் நிறைவேற்றாதவராக இருந்தால், கவனமாகச் சிந்தியுங்கள். **I** யோவான் 3:16–18 ல் சரீர தேவையிலிருக்கும் சகோதரருக்கு நாம் உதவ வேண்டும். ஆவிக்குரிய வகையில், ஒரு சகோதரன் வழிவிலகிப் போனால். அவரை அணுகி, தப்பிப்போன மார்க்கத்திினின்று அவர்களைத் திருப்பவேண்டும். இதைச் சாந்தமுள்ள ஆவியோடு செய்ய வேண்டும்.

பிரியமான வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும், அதில் வளருகிறவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதின் மூலமாகவும், சகோதரர்களை நேசிப்பதின் மூலமாகவும் தேவனுடைய அன்பை நம் வாழ்வில் பிரதிபலிக்க முடியும். அதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். இம்முயற்சியில் வெற்றி பெற தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

★

## கிறிஸ்துவுக்குரிய நான்கு காரியங்கள்

**கிறிஸ்துவின் சுவிசேஷம் – நம் கருப்பொருள்** (பிலிப்பியர் 1:27)

**கிறிஸ்துவின் பணி – நம் பணி** (பிலிப்பியர் 2:30)

**கிறிஸ்துவின் ஞானம் – நம் பாடம்** (பிலிப்பியர் 3 :8)

**கிறிஸ்துவின் வல்லமை – நம் பெலன்** (பிலிப்பியர் 4:13)







Dr. பிரெய்ஸி ஏபில் நாயகம்

**அ**ன்புக் குழந்தைகளே! நீங்கள் எல்லாரும் நலமாயிருப்பீர்கள் என நம்புகிறேன். அத்தோடு, தினந்தோறும் வேதம் வாசிப்பீர்கள் எனவும் நம்புகிறேன். கடந்தமாதம், வேதாகமத்தை வாசிப்பது மாத்திரமல்ல, அதைச் சரியாகப் புரிந்து, அதன்படி வாழ்வதன் அவசியம் பற்றிப் பார்த்தோம். இம்மாதம் **மன்னிப்பு** என்னும் மாபெரும் குணம் பற்றி உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

அருமைப் பிள்ளைகளே, நாம் எல்லாரும் அவ்வப்போது தவறு செய்கிறவர்களே. தவறு செய்யாதர்கள் யாருமே இல்லை. ஒருவேளை நாம் தவறு செய்தாலும், மனந்திரும்பி மீண்டும் செய்யாமலிருப்பது தான் மிகவும் முக்கியம். ஒரு தவறை நீங்கள் தவறு என்று தெரிந்தும் செய்வீர்களானால் உடனடியாக தேவனிடம் மன்னிப்புக் கேட்டு அத்தவறை மீண்டும் உங்கள் வாழ்வில் செய்யாதவர்களாயிருக்க வேண்டும்.

லூக்கா நற்செய்தி நூல் 7:36–50 வசனப்பகுதியில் இயேசு தன் பாதத்தில் விழுந்து, தன் பாதங்களைக் கண்ணீரால் நனைத்து, தலைமயிரால் துடைத்த ஒரு பாவியான பெண்ணின் பாவங்களை மன்னித்தது பற்றிப் பார்க்கிறோம். இன்னும் 1யோவான் 1:9–ல், நாம் மனந்திரும்பி நம்முடைய பாவங்களை அறிக்கையிடுவோமானால் நமக்கு மன்னிப்பு அருளுகிறார் என்று வாசிக்கிறோம். அப்படிப்போல, மற்றவர்கள் நமக்கு எதிராகத் தவறு செய்தால் நாம் அவர்களை மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் தேவன் நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிப்பார். [கொலோ.3:13].

ஆம், சிறு பிள்ளைகளே! நாம் எல்லாரும் பாவம் செய்யக் கூடிய பெலவீன பாண்டங்களாக இருக்கிறோம். சிறு பிள்ளைகளாக இருந்தாலும் பாவம் நாம் செய்ய நேரும் போது,

உடனடியாகத் தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும். தேவன் நமக்கு மன்னிப்பது போல நம்முடைய நண்பர்களின் பாவங்களை நாம் தயங்காமல் மன்னிக்க வேண்டும். சிறு பிள்ளைகளை தேவன் அளவில்லாமல் நேசிக்கிறார். ஆகையால் தேவனுக்குப் பிரியமாக நற்காரியங்களைச் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். சரியா? அப்படிச் செய்வோமா?

*அன்புடன், Dr. பிரெய்ஸி அக்கா.*

## சிறுவர்களுக்கான வேத வினா ( லூக்கா 7:36-50)

1. இயேசு எங்கே போஜன பந்தியிருந்தார்?
2. 39-40 வசனங்களின்படி, அவர் யாரிடத்தில் பேசினார்?
3. இயேசுவுக்குப் பின்னாக நின்ற இவள் எதைக் கையில் பிடித்திருந்தாள்?
4. அந்த இரண்டு பேரும் எவ்வளவு கடன்பட்டிருந்ததாக இயேசு சொன்னார்?
5. அந்த இரண்டுபேரில் எவன் கடன்பட்டவனிடத்தில் அதிகமாக அன்பு கூருவான்?
6. கொஞ்சம் பாவங்கள் மன்னிக்கப்பட்டவன், அதிக பாவங்கள் மன்னிக்கப்பட்டவன், இவர்களில் யார் தேவனிடம் அதிக அன்பு கூருவான்?
7. இப்பெண் போல, உங்கள் வாழ்வில் தேவனிடம் அதிகமாய் அன்பு கூர்ந்து, தேவனிடம் தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்பீர்களா?

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| சாமுவேல் | – | காங்கயம் |
| ரோஸ்லின் ஜெசிந்தா | – | காங்கயம் |
| சகாய புஷ்பராஜ் | – | மணப்பாறை |
| ராகுல் | – | காங்கயம் |
| ஜோஸ்வா ரோஷன் | – | காங்கயம் |
| ஜாஸ்பர் பிரின்ஸ் | – | காங்கயம் |
| கிங்ஸ்லி ரூபஸ் | – | காங்கயம் |
| ஜஸ்டின் | – | காங்கயம் |
| தினகரன் | – | காங்கயம் |
| B. பெனிட்டா டென்னி சாரன் | – | காங்கயம் |
| S. ஸ்டெஃபி ஏஸ்லின் | – | பல்லடம் |
| S. ஹெவன்லின் | – | திருப்பத்தூர் |
| ஷைனி | – | திருப்பூர் |
| ஸ்டைலி | – | திருப்பூர் |
| ஷோபியா | – | திருப்பூர் |
| ஜாய்ஸ் | – | திருப்பூர் |
| அகஸ்டின் | – | திருப்பூர் |
| ஜோர்சி | – | திருப்பூர் |

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை நவம்பர் மாத இதழில்)**

**II இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் ( 1 - 5 அதிகாரங்கள்)**

1) யாருடைய மரணத்திற்குப்பின் யார் இஸ்ரவேலுக்கு விரோதமாக கலகம் பண்ணினார்கள்?
2) திஸ்பியன் என்று அழைக்கப்படுகிறவர் யார்?
3) கர்த்தர் எலியாவை எப்படி பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டார்?
4) எலியா எலிசாவிடமிருந்து எங்கேயிருந்து புறப்பட்டு போனார்?
5) தீர்க்கதரிசிகளின் புத்திரர் எங்கேயிருந்து எலிசாவிடமிருந்து வந்தார்கள்?
6) யூதாவின் ராஜாவின் பெயர் என்ன?
7) மோவாயின் ராஜாவின் பெயர் என்ன?
8) கேயாசி என்பவர் யார்?
9) நான்காம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற பர்வத்தின் பெயர் என்ன?
10) சீரிய ராஜாவின் படைத்தலைவரின் பெயர் என்ன?

## செப்டம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. ஆகாபின் அரண்மனை அண்டையில் (21:)
2. ஆகாபின் பெயரால் (21:8)
3. மூன்று வருஷம் (22:1)
4. யூதாவின் ராஜா (22:2)
5. நானூறு (22:6)
6. கேனனாவின் குமாரன் (22:11)
7. அகசியா (22:40)
8. முப்பத்தைந்து (22:42)
9. தர்ஷீஸ் (22:48)
10. பெயரொபெயாமின் வழியில் (22:58)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| ரபேக்காள் ஜேசுராஜ் | - | மணப்பாறை |
| ருபவல்யா | - | நாசரேத் |
| மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| இந்திரா ஜெபக்கனி | - | நாசரேத் |
| சாமுவேல் மோகன்தாஸ் | - | சென்னை |
| சாந்தகுமாரி | - | நாதரேத் |
| செல்சியா பெர்னிஷ் | - | திருப்பூர் |
| மேசியா பிரிசில்லா | - | திருப்பூர் |
| சைமன் | - | சென்னிமலை |
| ஜெனிபர் சுரேஷ் | - | கேத்தி பாலாடா |
| ரோஷினி | - | பவானி |
| சங்கீதா | - | அவிநாசிபாளையம் |
| ராமசந்திரன் | - | காங்கயம் |
| வசந்தா செல்வராஜ் | - | கள்ளக்குறிச்சி |
| ஜான்சி | - | ஆனைமலை |
| பால்ராஜ் | - | ஆனைமலை |
| பீட்டர் தாமஸ் | - | திருவண்ணாமலை |
| ரவிச்சந்திரன் | - | சென்னை |
| சுசீலா | - | மூலனூர் |
| ஸ்வேதா | - | பவானி |
| ஹேமாவதி | - | பவானி |
| ஈஸ்வரி இம்மானுவேல் | - | பவானி |
| ஜெயமணி ஜெயபாண்டியன் | - | கடலூர் |
| தரணிக்குமார் | - | திருப்பூர் |
| தனம் பேன்ஸி | - | தியாக துருகம் |
| காணிக்கை | - | திருச்சி |
| செல்வம் | - | வெள்ளலூர் |
| ஜமுனா சேகர் | - | திருப்பூர் |
| புளோராசம்மா | - | திருப்பத்தூர் |
| ஜெயராஜ் | - | கோவை |
| செவ்வமணி குணசேகரன் | - | சென்னை |
| அருள்ராஜன் | - | சென்னை |
| தங்கத்தாய் | - | பொங்கலூர் |
| பாக்கியம் சம்பூரணம் | - | ஈரோடு |

# ஆசாரியத்துவத்தின் ஆச்சரியம்

Bro. பென்னி மார்டின்

உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் குழந்தைகளாயிருந்த போது நாட்டின் சட்டதிட்டங்கள் நம்மை கட்டுப்படுத்தவில்லை, கவலைகளை விட்டுவிட்டு பட்டாம் பூச்சி களை போல பறந்து திரிந்தோம். அந்நாட்களின் நினைவலைகள் இன்னும் நம் நினைவை விட்டு நீங்காமல் நிலைத்திருந்து நம்மை மலைத்துப் போகச் செய்கின்றன. நாம் குழந்தைகளாயி ருந்த போது சொந்தமாக நாம் வாகனத்தை வைத்திருக்கும் உரி மை நமக்கில்லாதிருந்தது, ஓட்டுப் போடும் உரிமை நமக்கில்லா திருந்தது. ஆனால் நாம் பெரியவர்களான போது நாட்டின் சட்ட திட்டங்கள் நம்மை கட்டுப்படுத்த தொடங்கிவிட்டன. இப்போது நமக்கு ஓட்டுரிமை உண்டு. சொத்துக்களை வாங்கும் உரிமை உண்டு. உரிமை களைப் பெற்றிருக்கும் நாம் பொறுப்புகளையும் பற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால், உரிமையும் பொறுப்பும் ஒன்றோடொன்று கைகோர்த்து செல்கின்றன. அதையாரும் பறித்து விடமுடியாது. ஓட்டு மொத்தமாக நாம் பார்க்கும் போது, சிறுவயதில் நம்மைக்கட்டுப்படுத்திய சட்டம் வேறு, இப்போது நம் மைக் கட்டுப்படுத்துக்கிற சட்டம் வேறு.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யூதர்களும் இதே விதமான சூழ் நிலையில் தான் இருந்தார்கள். அவர்கள் மோசேயின் பிரமாணத் தின் கீழ் வாழ்ந்து கொண்டு பலிகளைச் செலுத்தினார்கள், பண்டி கைகளை ஆசரித்தார்கள். இன்னும் மோசேயின் மூலமாக தங்க ளுக்கு கொடுக்கப்பட்ட எல்லா பிரமாணங்களையும் கைக்கொண் டார்கள். அதன் பிறகு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பெந்தேகொஸ்தே நாளில் கிறிஸ்தவம் ஆரம்பமானது. அந்நாளில் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானித்த சில யூதர்கள் மோசேயின் பிரமாணத்தை விட்டுவிட்டு தேவனுடைய புதிய உடன்படிக் கைக்குள் பிரவேசித்தார்கள். இவ்விதமாக அவர்கள் புதிய சட்டத் திட்டங்களைத் தழுவத் தயாரானார்கள். அவர்கள் கிறிஸ்தவத் திற்கு வந்த உடனே பெற்றுக் கொண்ட மிகப்பெரிய சந்தோஷங் களுள் ஒன்று தேவன் ஆசாரியர்களாக விசேஷித்த நபர்களை தெரிந்து கொள்ளாமல், கிறிஸ்துவைப் பின்பற்றும் எல்லோருக் கும் அந்த வாய்ப்பைக் கொடுத்தது தான் (வெளி.1:6).

I. **ஆசாரியத்துவம் என்னும் பாக்கியம்**

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நாமெல்லோருமே ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாகத் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறோம் [I பேதுரு 2:5]. நாம் தேவனால் ஆசாரியர்களாக ஆக்கப்பட்ட விதம் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும். முற்காலங்களில் தேவன் லேவியரீகளை ஆசாரியர்களாக்கி கனப்படுத்தினார். இந்நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளாக வந்த ஒவ்வொருவரையும் தம்முடைய ராஜ்யத்தில் ஆசாரியர்களாக்கி கனப்படுத்தியிருக்கிறார். மோசேயின் பிரமாணத்தின்படி வாழ்ந்த ஆசாரியர்கள் தேவனோடு விசேஷித்த உறவைக் கொண்டிருந்தார்கள், அனுதினமும் தேவனுடைய சமூகத்தில் சஞ்சரிக்கும் சிலாக்கியம் கிடைத்தது. இது மற்ற இஸ்ரவேலர்களுக்கு கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாளையத்திலும் இவர்களுடைய கூடாரம் ஆசாரிப்புக் கூடாரத்திற்கு நேர் எதிரே காணப்பட்டது. இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தில் குடியேறின போது அவர்களுக்கு நிலம் பங்கீட்டுக் கொடுக்கப்பட்டது. ஆனால் லேவியர்களுக்கோ பங்கு எதுவும் கொடுக்கப்படவில்லை. தேவனே அவர்களுக்கு சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டார் அவர்கள் வசிக்க நாற்பத்தெட்டு பட்டணங்களும், சுற்றிலிமுள்ள மேய்ச்சல் பகுதிகளும் கொடுக்கப்பட்டன. இவர்கள் தங்கள் நேரத்தை தேவனுடைய ஊழியத்திற்கு கொடுக்கத்தக்க மற்ற கோத்திரங்கள் இவர்களுக்கு உதவ வேண்டுவென தேவனால் கட்டளையிடப்பட்டிருந்தார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தில் பலியிடப்படுவதற்காக இஸ்ரவேலர்களால் கொண்டு வரப்படுகிறவைகளெல்லாம் ஆசாரியர்களாலே மாத்திரம் தான் தேவனுக்குப் பலியாக செலுத்தப்படும். இவ்விதமாக பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவனோடு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளும் சிலாக்கியம் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்குள் வரும் ஒவ்வொருவருக்கும் தேவனால் கொடுக்கப்படுகிறது. இவைகளை தேவன் தமக்குரிய சொந்த ஜனங்களாக ஏற்றுக் கொள்கிறார். புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்குள் வரும் ஒவ்வொருவருக்கும் தேவனால் கொடுக்கப்படுகிறது. இவர்களை தேவன் தமக்குரிய சொந்த ஜனங்களாக ஏற்றுக்கொள்கிறார். புதிய ஏற்பாட்டில் தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசாரியர்களாக ஆக்கின உண்மை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறதா?

II. **ஆசாரியத்துவம் என்னும் சிலாக்கியம்**

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் அங்கம் வகிக்கும் நாமெல்லோருமே ஆசாரியர்களாக தேவனிடத்தில் கிட்டிச் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் மிக எளிதாக கிட்டிச் சேர முடியும். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே காணப்பட்ட எல்லா தடைகளும் சிலுவையில் கிறிஸ்துவால் தகர்த்தெறியப்பட்டன. இதைக் குறித்து பவுல் அந்தப்படியே நாம் இருந்திறந்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம் என்று சொல்கிறார் (எபேசியர் 2:18). ஒருவர் தேவனிடத்தில் வருவதற்கு மத்தியஸ்தராக கிறிஸ்து மாத்திரமே இருக்கிறார். பழைய ஏற்பாட்டின் நாட்களில் யூதர்கள் ஆசாரியர்கள் மூலமாகத்தான் தேவனிடத்தில் கிட்டிச் சேர்ந்தார்கள். ஆனால் இன்று தேவனால் நாம் ஆசாரியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறபடியால் இது நாம் அவருக்காக உத்தமத்துடனும், உத்வேகத்துடனும் உழைக்க உற்சாகப்படுத்த வேண்டும். தேவன் அவருடைய சமூகத்தில் நம்மை வரவேற்று அவருடைய ஐக்கியத்தை அனுபவிக்கும் வாய்ப்பைக் கொடுத்து அவரை அணுகுவதற்கான சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார். கிறிஸ்தவர்களாக நாம் ஆசாரியத்துவப் பணியை செவ்வென செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டு ஆசாரியர்களான நாம் மிருக பலிகளை எல்லாம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக, பாடல், ஜெபம், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல், கொடுத்தல், தேவனுடைய வார்த்தைகளைப் படித்தல் போன்ற ஆவிக்குரிய பலிகளைச் செலுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். பாடலைப் பற்றி எபிரெய ஆசிரியர் சொல்லும் போது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலி என்று சொல்கிறார் (எபிரெயர் 13:15).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குப் பிரதான ஆசாரியராக இருக்கிறபடியால் ஆசாரியர்களாக இருக்கிற நாம் எங்கேயும், எப்போதும் தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும். நம் இரட்சகராகிய கிறிஸ்து ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார் ( எபிரெயர் 9:12). பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியர்கள் வருடத்துக்கு ஒரு முறை பாவ நிவிர்த்திக்காக மிருக பலி செலுத்தி அதின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்கள், கிறிஸ்து

இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட் சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் [ எபிரெயர் 9:21,25]. கிறிஸ்து என்றென்றும் நம் பிரதான ஆசாரியராயிருக்கிறபடியால், கிறிஸ் தவர்களாகிய நாம் தேவனுடைய வார்த்தையை உலகெங்கும் பிர சங்கிக்கும் படியாக கட்டளைப் பெற்றிருக்கிறோம் [மாற்கு 16:15,16]. உலகப்பிரகாரமாக ஆசிரியப் பணி ஓர் உன்னதமான பணி என்று சொல்வார்கள். உள்ளபடியே பார்த்தால் கிறிஸ்தவர் களைப் பொறுத்தவரையில் ஆசாரியப் பணி உன்னதமான பணி யாயிருக்கிறது. இருள் சூழ்ந்த இவ்வுலகில் அருள் நாதராம் இயேசு கிறிஸ்து ஆசாரியப் பணியை செய்ய நம்மை அழைத்தி ருக்கிற படியால் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்து கொள்வோம்.

## நாளும், நடப்பும்

- சீன அதிபர் ஷி ஜின்பிங் மோடி – வரலாற்று சந்திப்பு. இந்தியா – சீனா இடையே முக்கிய பேச்சு
- பட்டினி ஒழிப்பு நாடுகளின் பட்டியலில் 102 – இடத்தில் இந்தியா – ஆய்வறிக்கை தகவல்
- இந்திய வம்சாவளி அபிஜித் பானர்ஜிக்கு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு
- தொடங்கியது வடகிழக்கு பருவமழை
- சர்ச்சைக்குரிய அயோத்தி வழக்கு விசாரணை நிறைவு – தீர்ப்பு ஒத்திவைப்பு
- பிசிசிஐ – புதிய தலைவரானார் – சௌரவ் கங்குலி

# நீங்கள் தன்னார்வமிக்கவரா?

**Bro. Jerry Bates**

**ஏ**சாயா 6-ம் அதிகாரத்தில், ஏசாயா தன்னிச்சையாகவே போய் கர்த்தருக்காகப் பேச விரும்பியிருக்கிறார். ஏசாயா ஏன் தன்னார்வமாகச் செயல்பட்டார்? இத்தனைக்கும் அவர் செய்யத் துடித்த வேலை அவ்வளவு இனிமையானதல்ல. பணம், கனம், மகிமை போன்றவைகளுக்காக அவர் அப்பணியைச் செய்யவில்லை. அவைகளில் ஒன்றையும் இவர் பெற்றுக்கொள்ளவுமில்லை, அப்பணியில் வெற்றி நிச்சயம் என்று அவருக்கு உறுதியளிக்கப்படவுமில்லை, ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டார்களென்று தான் அவருக்குச் சொல்லப்பட்டது. வேலையைத் தொடங்குவதற்கு முன்பே, அதில் வெற்றிக்கான வாய்ப்பு குறைவு என்று தெரிந்து தான் அந்த வேலையை அவர் தெரிந்து கொண்டார். இருந்தபோதிலும், ஒரு கூட்ட ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பார்களென்று தேவன் உறுதியளித்தார் (ஏசாயா 6;12,13).

நம்முடைய பிரசங்கத்தை அநேகம் பேர் கேட்பார்கள் என்று நாம் அறிந்திருந்தோமானால், நம்மில் பலர் தேவனுடைய வார்த்தையை பேசுவதற்கு சந்தோஷமாயிருப்போம். ஆனால், உண்மைநிலை பெரும்பாலும் நமக்கு சாதகமாக இருப்பதில்லை. அதனால் நாம் சோர்ந்து போகிறோம். அப்படி நாம் சோர்ந்து போகாமல், நாமாகவே முன் வந்து தேவனுடைய வேலைக்காரார்களாக தேவனுக்கு சேவை செய்ய, ஏசாயா நமக்கு சிறந்த முன்னுதாரணமாக இருக்கிறார். எனவே,கர்த்தருடைய வேலையைச் செய்ய இன்னொருவர் சொல்லவேண்டும் என்று நாம் காத்திருக்க வேண்டாம். நாமாகவே முன் வந்து தன்னார்வத்துடன் கர்த்தருக்கு ஊழியம் செய்வோம்.

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு, நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்(எபே.5:16; கலா.6:9). அப்படிச் செய்ய நெகேமியாவின் நாட்களில் எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளை திடப்படுத்தினவர்களைப் போல (நெகே.2:18). நாமும் நம் கைகளைத் திடப்படுத்துவோம். ★

# ஆசாரியனும், பிரதான ஆசாரியனும்

Bro. K. பாண்டியன்

**தே**வப் பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உலகத்திலே கடவுளை ஏன் வணங்க வேண்டும், எப்படி முறைப்படி வணங்க வேண்டும் என்பதெல்லாம் தேவ வார்த்தைகள் அடங்கிய நம் பைபிளில் மட்டுமே விவரமாக சொல் லப்பட்டடுள்ளது. அதைக் காப்பி அடித்துதான் இன்றைக்கு அநே கர் பலவிதமாகக் கடவுளை வணங்கி வருகிறார்கள். முட்செடி யில் எரியும் அக்கினியில் தோன்றிய நம் தேவனே முதன் முதலாக தன்னை வணங்கும் முறைமைகளை மோசேயின் மூலமாக இவ் வுலகத்திற்குத் தெரிவித்தார். தேவன் தன்னை வணங்க ஒரு குறிப்பிட்ட அளவுள்ள **ஆசாரிப்புக்கூடாரத்தை** அமைக்க இஸ்ர வேல் ஜனங்களுக்கு கட்டளையிட்டு வனாந்திர பிரயாணத்தில் அதிலே பலியிட்டு தன்னை ஆராதிக்கச் செய்தார்.

எகிப்தின் அடிமைகளாயிருந்த ஜனங்களை எனக்கு **ஆராதனை செய்யும்படி** என் ஜனங்களை அனுப்பிவிடு என்று பார்வோனுக்குக் கட்டளையிட்டார். அதனால் உலகத்தில் – படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத் தான் தன்னை வணங்க என்ற வழக்கச் சொல் உள்ளது. ஆராதிக்க அழைத்த தேவன் அவர்களிடம் ஆசாரிப்புக்கூடாரத்தில் **இரண்டாம் திரைக்குள்ளே** மகா பரிசுத்த ஸ்தலமும், முந்தின பாகத்தில் பரிசுத்த ஸ்தலமும் அமைக்கவும் **முந்தின பாகத்தில்** குத்துவிளக்கு, அப்பத்திற்கான மேஜை மற்றும் தூபபீடம் ஆகியன வைக்கச் சொன்னார். கூடாரத்தின் முந்தின பாகத்தில் ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும் படிக்கு நித்தமும் பிரவேசிப்பார்கள். (எபி 9:6).

I பேதுரு 2:9 ன் படி, சபையார் ராஜரீக ஆசாரியக் கூட்டமாய் இருக்கிறோம். நமக்கு நிழலாகத்தான் பழைய ஏற்பாட்டு ஆசாரி யர்களின் பணி இருந்தது (கொலே 2:17). முதலாவது, அவர்கள் நித்தமும் குத்து விளக்கை எரிய வைக்க வேண்டும். இது எதைக் குறிக்கின்றது என்றால் நீதி 6:23–ன் படி, **கட்டளையே விளக்கு**

**வேதமே வெளிச்சம்** என்று காண்கிறோம். ஆகவே, சபையார் தினமும் கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதையே இது சுட்டிக் காண்பிக்கிறது. எனவேதான், இது நித்தியக் கட்டளை என்று வலியுறுத்தப்படுகிறது. **ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைகொள்ளக்கடவன் என்ற ஆண்டவர்,** நான் சுயமாய்ப் பேசவில்லை நான் பேச வேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார் என்கிறார் (யோவான் 12:49) ஆகவே, நாம் ஆசாரிய ஊழியத்தை ஜாக்கிரதையாய் நிறைவேற்றுவோம்.

அடுத்ததாக, கூடாரத்தின் முந்தின பாகத்தில் **தேவ சமூகத் தப்பங்களும், மேஜையும்** இருந்தது (யாத் 25:30) நித்தமும் வைக்கக்கடவாய் என்று காண்பது கட்டளை. மேலும், இதை ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிப்பதில்லை (மத் 12:4) கல்லுகளை அப்பங்களாக்கி சாப்பிடும்படி பிசாசு சொன்னபோது இயேசு பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். இந்த உலகில் ரட்சிக்கப்படாத அநேக மக்களுக்கு இல்லாத சிலாக்கிம் இரட்சிக்கப்பட்டு ஆசாரியராக இருக்கும் சபையாருக்கே தேவனுடைய வார்த்தை (அப்பம்) புசிக்கும் பாக்கிமுண்டு. நித்தமும் வேதம் வாசிக்கப் பழகுவோம்.

அதே வண்ணமாய் சாட்சிப்பெட்டி இருக்கும் இடத்திற்கு நேரே திரைக்கு வெளிப்புறமாக தூபபீடம் இருந்தது. காலை தோறும், மாலை மற்றும் விளக்குகளை சுத்தம் செய்யும் போது அதின் மேல் தூபங்காட்டுவதும் நித்திய கட்டளையாய் இருந்தது. ( யாத் 30:6-8) இது நாம் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு நிழலாக இருக்கிறது.( வெளி 5:8) ஆண்டவர் இயேசுவும் சோர்ந்து போகாமல், விசுவாசமாய் எப்போதும் ஜெபம் பண்ணுங்கள் என நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். அநேக ஆசீர்வாதங்களை நாம் சரியாக ஊக்கமாக ஜெபிக்க மறப்பதினால் இழந்து போகிறோம் என்பதை ஞாபகம் வையுங்கள். உதாரணமாக, ஜெபிக்காத சீஷர்களால் அசுத்த ஆவியை விரட்ட முடியாமல் போனது ( மத் 17:19-21) ஆகவே, ஜெபித்து ஜெயம் பெறுவோம்.

இப்படியிருக்க பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற் குள் வருஷத்திற்கு ஒருமுறை மட்டுமே தனக்காகவும், ஜனங் களுக்காகவும் பலியிட்டு அதில் பிரவேசிப்பான். அவனிடம் ஒரு வேளை பாவமிருக்குமானால் அங்கேயே செத்துப்போகும் அபாய முண்டு [லேவி 16:20] [எபி 9:7]. உள்ளே பொன்னால் செய்த தூப கலசமும், உடன்படிக்கை பெட்டியும் இருந்தது. பெட்டியில், மன்னா, ஆரோனின் தளிர்த்த கோல் மற்றும் கற்பலகைகள் இருந் தன. உடன்படிக்கையின் பெட்டியின் மேல் தேவசமூகம் என்று அழைக்கப்பட்ட கிருபாசனம் இருந்தது. நாம் அறிந்தபடி கிறிஸ் துவே பரலோகத்திலிருந்து வந்த மன்னா [யோவான் 6:58] என்றும், தளிர்த்த கோல் ஜனங்களில் ஆரோன் வம்சம் தெரிந்து கொள்ளப்பட்டது போல இப்போது நாம் தேவனுடைய புண்ணி யங்களை அறிவிக்கத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும் [I பேதுரு 2:9] மற்றுமாக கற்பலகையில் அல்ல **இருதயங் களாகிய** சதையான பலகைகளில் எழுதப்பட்ட புதிய **உடன்படிக் கைக்கு சொந்தக்காரராக**வும் இருக்கின்றோம் [I கொரி 3:3].

மேற்கண்ட ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நம்முடைய மகா பிரதான ஆசாரியரே காரணம் இவர் மற்றவரை போல் அந்நிய ரத்தத்தோடல்ல சொந்த ரத்தத்தோடே பாவமில்லாமல் **ஒரே தரம்** கையால் செய்யப்படாத உண்மையான **பரலோகத்தில்** தேவனி டம் பிரவேசித்தார் [எபி 9:25] அவரே நமக்கு அழியாத, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்திருக்கும் போஜனமாகிய தம்முடைய வர்த்தைகளை தந்துள்ளார் [I யோவான் 6:27]. கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரித்த ஆசாரியர்களை போல நாமும் நம்மைக் கழுவிச் சுத்திகரித்து மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிற படி யால் இரக்கம், கிருபை பெற தைரியமாக கிருபாசனத்தண்டை யிலே சேரக்கடவோம். [ எபி 4:14-16] தேவ சமாதானம் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென். ★

---

**நாளைய தினத்தின் மலர்களெல்லாம்**
**இன்றைய தினத்தின் விதையில்**
**தான் பதிந்துள்ளது.**
**நாளைய இரட்சிப்பும் கூட**
**இன்றைய வசனத்தில்**
**தான் அடங்கியுள்ளது.**

# உமக்குச் சித்தமானால்...
## ....உம்மால் கூடும். மத்: 8:1-4

Bro. K. M. பிலிப்

**அ**ன்பான தேவ ஜனமே! யாவருக்கும் இரட்சகர் இயேசு வின் இணையற்ற நாமத்தினாலே வாழ்த்துக்கள். மத். 8:1–4 வரை உள்ள வரலாற்றின் வாயிலாக ஒரு உண்மையான விசுவாசியின் உறுதியையும், இதன்மூலம் அவன் பெற்றுக் கொண்ட நன்மை யையும் நாம் புரிந்து கொண்டு பெலப்பட தேவன் உதவி செய்வாராக.

இப்பகுதியில் இயேசுவிடம் வந்த ஒரு குஷ்டரோகி சுகம் பெற்றுச் செல்கிறான். இவன் இயேசுவிடம் வருமுன் அவன் இருந்த நிலையை சற்று கவனிப்போம். அவன் சரீரம் குஷ்டத்தால் அழுகி, துர்நாற்றம் வீசக் கூடியதும், வேதனையையும், அருவெ றுப்பையும் கொடுக்கக் கூடியதுமாயிருந்தது. அவன் மனநிலை – பயம், வெறுப்பு, மரண போராட்டம், நம்பிக்கையின்மை மற்றும் இருள் சூழ்ந்ததுமாயிருந்தது. அவன் சமுதாயநிலை – மனைவி, பிள்ளைகள், உறவினர், சுற்றத்தாரால் ஒதுக்கப்பட்டதும், தனிமையானதுமாயிருந்தது. இப்படிப்பட்டவன்தான் இயேசுவி டம் வந்து எல்லா நிலையிலும் முழுமையாய் சுத்தமாகிறான்; சுகம் பெற்றுக் கொள்கிறான். ஒரு புதிய வாழ்க்கை வாழும் பாக்கியம் கிடைத்தது. அன்பானவர்களே! பாவம் பிடித்த மனிதனின் நிலையும் இதுவே. அவன் சரீரத்தில், **ஐயோ யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்கு காரணமில்லாத கா யங்கள்? யாருக்கு சண்டைகள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்?** (நீதி. 23:29) என்ற புலம்பலும், எலும்புகளில் சௌக்கி யமில்லாத ஒரு நிலை (சங் 38:3). அவன் மனநிலையோ, என்னை அடித்தார்கள் எனக்கு நோகவில்லை என்னை அறைந்தார்கள் எ னக்கு சுரணையில்லை என்ற உணர்வற்ற நிலை. அவன் சமு தாய நிலையோ துன்மார்க்கரின் (பாவியின்) வீட்டில் கர்த்தரின் சாப மிருக்கும். அவன் வருமானத்திலோ துன்பமிருக்கும். ஒதுக்கப் பட்ட நிலைதான் (நீதி 3:33; நீ 20:1; சங் 15:1). இப்படிப்பட்ட வாழ்க்கை தேவையா? இவர்கள், பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து, இயேசு உலகத்தில் வந்தார் ( 1தீமோ 1:15) என்பதை அறிந்து அவ ராலேயன்றி (இயேசுவால்) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (யோவான் 1:9) என்பதை புரிந்து இயேசுவிடம் வந்து நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்

பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியுமுள்ளவராய் இருக்கிறார் [I யோவான் 1:9]. அப்படிப் பாவம் கழுவப்பட்டவர்கள் சுத்தமான ஒரு புதிய வாழ்க்கை வாழ முடியும்.

இயேசுவிடம் வந்த குஷ்டரோகி என்னை சுத்தமாக்க உம்மால் கூடும் என்று சொன்னதில் அவன் இழந்து போன சரீர சுகத்தையும், சந்தோஷமும், சமாதானமுமான மனநிலையையும் பெற்றுக் கொள்ள **சரியானவரிடத்தில் வந்தான்** என்பது தெளிவாய் விளங்குகிறது. இன்றும் பாவத்தால் இழந்து போன சுகம், பெலன், சந்தோஷம், சமாதானம் பெற்றுக் கொள்ள இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்வுமே கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்பதே **சரியான வார்த்தையாகும்** [லூக்கா 19:10]. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! .... என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்ற [ மத் 11:28] இயேசுவின் அழைப்பே **சரியான அழைப்பாகும்.** அவராலே [இயேசுவாலே] அன்றி நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை [அப் 4:12] என்பதே சரியான வழியாகும். பாரம்பரியமோ, மனுஷருடைய கட்டளையோ, வழிபாடோ, சுயநீதியோ சரியான இரட்சிப்பை கொடுக்காது. இயேசுவின் சுவிசேஷமே இரட்சிப்பை கொடுக்கும் [II தெச 2:14] இதைப் புரிந்து சரியானவரிடத்தில் வந்திருக்கும் நாம் மற்றவர்களையும் சரியானவரிடத்தில் அழைத்து வருவோம்.

இயேசுவிடம் வந்த குஷ்டரோகி இயேசுவைப் பணிந்து அவரைக் கனப்படுத்தினான். ஆண்டவரே! என்று அழைத்து, இயேசு தன்னை ஆண்டு கொள்ளும்படி தன்னை ஒப்புக் கொடுத்த தான். ஏற்றுக் கொண்ட இயேசு அவனுடைய எல்லா நெருக்கத்திலிருந்தும் விடுவித்தார். ஆம், நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார் என்ற [சங் 118:5;145:19 தாவீதின் அனுபவம் குஷ்டரோகியின் அனுபவமாயிற்று. நாமும் கூட தேவனை ஆராதித்து நம்மை ஒப்புக்கொடுத்து தாவீதின் அனுபவத்தைப் பெற்று மகிழ்வோம்.

மேலும், இவன், என்னை சுத்தமாக்க உம்மால் கூடும் என்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டான். இந்த விசுவாசம் இவனுக்குள் எப்படி ஏற்பட்டது? இவன் குஷ்டரோகி, தீட்டானவன்;

பாளையத்திற்கு வெளியே தனித்து இருப்பவன். இவன் இயேசு செய்த அற்புதங்களை நேரில், கண்களால் காணும் வாய்ப்பில்லாதவன். அதே சமயம் இயேசு செய்த அற்புதங்களைக் குறித்து உறவினர் மூலம் கேள்விப்பட்ருக்க மட்டுமே வாய்ப்புண்டு. ஆம், விசுவாசம் கேள்வியினால் வரும் [ரோமர் 10:17] என்ற வார்த்தையின் படி, கண்டல்ல, கேள்விப்பட்ட நிலையிலேயே தன் விசுவாசத்தை வளர்த்துக் கொண்ட பாக்யவான். இந்த விசுவாசத்தின் கிரியைதான், அவன் எழுந்து நடந்து இயேசுவுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தி உம்மால் கூடும் என்று அறிக்கை செய்ய வைத்தது மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் [மத் 10:32]. என்ற இயேசுவின் வாக்கின் படி அவன் சுகம் பெற்றான். அன்பானவர்களே, விசுவாசம் கேள்வியினால் வரும் என்பதில் தெளிவடைவோம். ஆராதனையின் மூலம், கிறிஸ்தவ வாழ்க்கை மூலம், நம் விசுவாசத்தை அறிக்கை செய்து தேவனை மகிமைப்படுத்துவோம். தேவன் நம் விண்ணப்பத்தை ஏற்று நம்மை சுத்தமாக சுகமாகக் காத்துக் கொள்வார்.

பிரியமானவர்களே! உம்மால் கூடும் என்பது குஷ்டரோகியின் விசுவாசமாயிருந்த போதும், உமக்குச் சித்தமானால் என்று தன்னை முற்றும் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து தானும் தேவ பிள்ளை என்பதை உறுதிப்படுத்தினான். தேவ குமாரனாகிய இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் எந்த நிலையிலும் தன்னை தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழ்ந்ததால் இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்ட போதிலும் தேவன் அவரை உயிரோடெழுப்பி மகிமைப்படுத்தினார். இவ்வுலகில் தேவ பிள்ளைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் முற்றிலும் தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தால், அவர் நமக்கு செவி கொடுத்து [யோவான் 5:14] நம்மை மகிமைப்படுத்துவார். மேலும், குஷ்டரோகி தைரியமாய் இயேசுவிடம் வந்தது, பணிந்தது, விசுவாசத்தோடு விண்ணப்பித்தது, அவர் சித்தத்திற்கு ஒப்பு கொடுத்தது – இவை எல்லாவற்றையும் இயேசு கவனமாய் கவனித்தார். ஆகவே, உடனே அவர் **எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு** என்று பூரண சுகம் கொடுத்தார்.

நம் ஒவ்வொருவர் இருதயத்தையும் வேண்டுதலையும் தேவன் அறிகிறவராகவே இருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் ஆன்மீக வாழ்க்கையில் சுத்தமாக வேண்டும் என்பதும், சரீர வாழ்க்கையில் சுகமாய் வாழ வேண்டும் என்பதே தேவ சித்தம். நம்மை அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து வாழ்ந்து சுகித்திருப்போம். [1தீமோ 2:4;1 தெச.4:3] ஆமென்.

☆